# செம்பதாகை

மலர்: 1
இதழ்: 7
ஆடி
1979
விலை சதம்: 50

புரட்சிகர வெகுஜன ஏடு


# நாட்டின் இன்றைய நிலைமைக்கு தீர்வு என்ன?

நாட்டில் இரு இனங்களுக்கிடையிலான பதட்ட நிலையைத் தூண்டுவதன் மூலம் இனவாத சக்திகளும், உள்நாட்டு, வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளும் தத்தமது தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயலுகின்றன. இந் நிலைமைக்கு எதிராகத் தேசத்தின் ஒருமைப்பாட்டையும், இனங்களின் நட்புறவையும், குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தின் ஐக்கியத்தையும் முதன்மைப்படுத்தும் சகல தேசபக்த சக்திகளும் ஒன்றிணைந்து முன் முயற்சியுடன் செயல்பட வேண்டுமென்பதே நமது வேண்டுகோளாகும்.

கடந்த காலங்களில் மாறி மாறிப் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் இனத்தின் மீது இன ஒதுக்கல் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்துள்ளன. இதனால் தமிழ் மக்கள் இன அடிப்படையிலான பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இதை முன்பு ஆட்சியில் இருந்தவர்களும் இன்று ஆட்சியில் இருப்பவர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். அதனாலேயே ''தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும்'' என்று கூறுகிறார்கள். அப்படி இருந்தும் ஏன் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை. இதற்கான காரணங்கள் எவை என்பது இவ்வேளை நன்கு சிந்திக்கப்படல் வேண்டும்.

## தேசபக்த சக்திகள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

தனிச் சொத்துடமையும், சுரண்டலையும் அடிப்படையாகக் கொண்ட இன்றைய சமூக அமைப்பும் அதன் பாதுகாவலர்களான ஆளும் வர்க்கமும் நாளாந்தம் சாதாரண மக்களுக்கு எதிரான பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனவே தவிர ஒன்றையாவது தீர்த்து வைத்தது கிடையாது. அத்தகைய பிரச்சினைகளில் ஒன்றே இன்று முக்கிய கவனத்தைப் பெற்றுள்ள இனப் பிரச்சினையாகும். இனப் பிரச்சினையை இன்றைய அமைப்புக்குள்ளோ, அதன் நிர்வாக அமைப்புகளினாலோ அல்லது அதன் சட்ட திட்டங்களினாலோ தீர்க்க முடியும் என்று நாம் நம்பவில்லை. காரணம் இனப் பிரச்சினை அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சினையேயாகும். பொருளாதாரப் பிரச்சினை என்பது தனிச் சொத்துடமையினதும், சுரண்டலினதும் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகளாகும். எனவே தனிச் சொத்துடமையும், சுரண்டலும் ஒழிக்கப்படும் ஒரு நிலையிலேயே சமூக அமைப்பிலும், பொருளாதார அமைப்பிலும் சகல மக்களினதும் சமத்துவம் என்பது நிலைநாட்டப்படும். உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான ஜனநாயகம், சமத்துவம் என்பது நடைமுறைப்படுத்தப்படும் போது பொருளாதாரப் பிரச்சினை என்பதோ அதன் அடிப்படையில் உருவாக்கப்படும் இனப் பிரச்சினை என்பதோ இருக்க முடியாது. அப்பொழுது இனங்களுக்கிடையிலான உண்மையான சமத்துவமும், ஐக்கியமும், நட்புறவும் உறுதிப்படுத்தப்படும்.

ஆனால் இவ்வித நிலை ஒன்று உருவாகுவதற்கு நீண்ட காலம் செல்லும். அதுவரை இனப் பிரச்சினையானது எவ்வித வளர்ச்சியும் அடையாது இருக்கப் போவதில்லை. நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் பெருகப் பெருக ஆளும் வர்க்கம் மக்களின் கவனத்தை இனவாதப் பக்கம் திசை திருப்புவதற்காக இனப் பிரச்சினையைத் தூண்டிய வண்ணமே இருக்கும். இக் கட்டத்தில் நமது நாட்டின் புரட்சிகர, முற்போக்கு, ஜனநாயக, நல்லெண்ணம் கொண்ட சகல தேசபக்தசக்திகளும் ஒன்றிணைந்து இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக உறுதியான இயக்கத்தை முன்னெடுத்து இனப் பிரச்சினையை எந்த அளவுக்கு குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு குறைப்பதற்கு சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

நமது நாட்டின் தேசபக்த சக்திகள் இன அடக்குமுறைகளையோ அல்லது இன ஒதுக்கல் கொள்கைகளையோ எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. எவ்விதத்திலும் அதற்குத் துணை போக முடியாது. அதே வேளை தேசத்தை இரண்டாகப் பிரிக்க முயலும் பிரிவினைக் கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. இங்கே சகல தேசபக்த சக்திகளும் நிதானமாகவும் சரியான நிலைப்பாட்டிலும் நிற்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில் தம்மை தேசபக்த சக்திகளின் ஒரு பிரிவினர் எனக்கூறிக் கொள்ளும் சிலர் பிரிவினையை எதிர்ப்பதற்கு பெரும் இன அகங்கார வாதத்திற்கு துணை நிற்கின்றனர் இது இன அடக்கு முறையை ஆதரிப்பதேயாகும். இதே போல் வேறொரு பிரிவினர் இன அடக்குமுறையை எதிர்ப்பதற்கு அல்லது தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து நியாயப்படுத்துவதற்கு பிரிவினையை ஆதரிக்க முற்படுகின்றனர். இது ஆபத்தானதாகும். இந்த இரண்டு போக்குகளும் நமது நாட்டின் இனப் பிரச்சினையை நிதானமான போக்கில் அணுகுவதற்கு துணை செய்ய மாட்டாது என்பதே எமது கருத்தாகும்.

நாம் இன ஒதுக்கலை, இனப் புறக்கணிப்பை வன்மையாக எதிர்க்கின்ற அதே வேளை பிரிவினைக் கோரிக்கையையும் வன்மையாகக் கண்டித்து எதிர்க்கின்றோம். காரணம் பிரிவினை நமதுநாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், உழைக்கும் மக்களின் வர்க்க ஐக்கியத்திற்கும் வேட்டு வைக்கின்றது. அத்துடன் முழுத் தேசத்தின் சுதந்திரம், சுயாதிபத்தியம் ஆகியவற்றிற்கு பெரும் அச்சுறுத்தலாகவும் அமைந்து விடுகிறது. இன்று ஏகாதிபத்திய, சமூக ஏகாதிபத்திய வல்லரசுகள் உலகின் பல நாடுகளில் ஏற்படுகின்ற உட் பிணக்குகளை; இனப் பூசல்களை, பிரிவினைக் கோரிக்கைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அந் நாடுகளையே தத்தமது பிடிக்குள் கொண்டு வர எத்தனிக்கும் நடை முறைகள் நமக்கும் ஒரு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நமது நாட்டின் பெரு முதலாளித்துவ சக்திகளோ அல்லது அவர்களின் சார்பான யூ. என். பி கட்சியோ நமது நாட்டினதும், மக்களினதும் நலனிலும் பார்க்க அந்நிய ஏகபோக முதலாளிகளினதும், உள்நாட்டு பெருமுதலாளிகளினதும் நலனிலேயே அக்கறையுள்ளதாக இருக்கின்றன. எனவே தேசியமுதலாளித்துவ சக்திகளின் மத்தியில் உள்ள உண்மையான தேசபக்த சக்திகள் உள்ளடங்கிய மற்றும் புரட்சிகர, முற்போக்கு, ஜனநாயக சக்திகள் தான் நமது நாட்டின் ஒருமைப்பாட்டிலும், உழைக்கும் வர்க்கத்தின் ஐக்கியத்திலும் அக்கறை கொள்ளல் வேண்டும். இதற்கு எதிராக உருவெடுக்கும் இனப் பிரச்சினை உட்பட எந்தப் பிரச்சினைக்கும் சரியான வழிகளில் முகம் கொடுத்து செயல்

(6ம் பக்கம் பார்க்கவும்)

### வாசகர்களுக்கு ஓர் அறிவித்தல்

யாழ் மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அமுல்படுத்தப்படும் பத்திரிகைத் தணிக்கைக்கு உட்பட்டே செம்பதாகை வெளிவருகின்றது என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ஆசிரியர் குழு)

# வவுனியா பிரதேச இணைப்பை அரசாங்கம் கைவிட வேண்டும்

இதுவரை காலமும் அனுராதபுர மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த கடவத் கோறளை, குஞ்சுட்டி கோறளை பதவியா ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் வவுனியா மாவட்டத்துடன் இணைக்கும் முடிவினை அரசாங்கம் பாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. அரசாங்கத்தின் இம் முடிவினை இணைப்புக்கு உள்ளாகி உள்ள பகுதிகளை உள்ளடக்கிய தொகுதிகளின் (மதவாச்சி, வவுனியா) எம். பீக்கள் உட்பட பலர் எதிர்த்துள்ளனர். இவ் இணைப்பானது சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் பலதரப்பட்ட அபிப்பிராயங்களை உருவாகியுள்ளன. குறிப்பாக இன ரீதியில் சாதாரண மக்கள் குரோதத்தையும், சச்சரவுகளையும் மேலும் தமக்குள் வளர்த்துக் கொள்வதற்கு இது ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

அவ்வாறாயின் அரசாங்கம் ஏன் இவ் இணைப்பை முன் நின்று செய்துள்ளது. இதை

(6ம் பக்கம் பார்க்கவும்)

**தேசபக்த சக்திகள் நாட்டின் எதிரி யார், நண்பன் யார் என்பதை இனம் காணவேண்டும்!**

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

## மஞ்சுசிறீ விவகாரத்தில் ஏரிக்கரையின் விஷமத்தனம்

யாழ்ப்பாணத்தில் ஓவியர் மஞ்சுசிறீ அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலை டெயிலிநியூஸ் பத்திரிகை தலையும் காலும் வைத்துச் சோடித்து வெளியிட்ட செய்தியானது அது எவ்வளவு தூரம் கீழே இறங்கக்கூடியது என்பதைக் காட்டியுள்ளது. நாட்டில் வகுப்புவாத நச்சைப் பரப்புவதில் அரசாங்கமும் ஒத்தாசை புரிகின்றது என்பதற்கு இது உதாரணமாக விளங்குகின்றது. டெயிலிநியூஸ் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதென்பதை நாம் மறந்துவிடலாகாது.

ஓவியர் மஞ்சுசிறீ யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வந்து போவார். குறிப்பாக இந்துக் கோவில்களுக்கும் சென்று ஸ்தூபிகளை பிரதி செய்பவர். அவரை மக்களுக்கு நன்கு தெரியும் என்பதோடு அவருக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல மதிப்பும் உண்டு. அப்படியிருந்த போதிலும் டெயிலிநியூசின் கதையின்படி சயிக்கிள்விபத்து அரசியல் ஆர்வமுள்ள தமிழர்களால் வேண்டுமென்றே மதிப்பிற்குரிய சிங்கள ஓவியர் மீது ஏற்படுத்தப்பட்டது என மறைமுகமாக யோசிக்க வைக்கிறது.

தணிக்கை

ஓவியர் பொலீசில் தெரிவித்தவாக்குமூலத்தையும் ஆஸ்பத்திரியில் உள்ள பொலீசாருக்கு அமெரிக்க சுற்றுலாப் பயணி தெரிவித்த வாக்குமூலத்தையும் வெளியிடுகையில் இது ஒரு சயிக்கிள்விபத்து மட்டுமே என்றும் ஒரு தாக்குதல் அல்லவென்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் டாக்டருக்கும், தாதிக்கும் இது ஒரு சயிக்கிள் விபத்து என ஓவியர் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணம் பொலீசில் வாக்குமூலம் கொடுத்திருந்த அமெரிக்க சுற்றுலாப் பயணி நாட்டைவிட்டு வெளியேறும் வரை 14 நாட்கள் பொறுத்திருந்து டெயிலிநியூஸ் தனது கதையை வெளியிட்டது. சுற்றுலாப் பயணி நாட்டிற்குள் இருக்கும்போது தனது கதையை வெளியிட்டிருந்தால் அதற்கு மறுப்பு வந்திருக்குமெனப் பயந்ததாலேயே அவர் வெளியேறும் வரை காத்திருந்தது போலும். வேறு ஒரு பிரமுகரும் சம்பவத்தைக் கண்ணால் கண்டவர் என்பதையும் அவர் ஒரு புல்பிறைட் விற்பன்னர் (புல்பிறைட் புலமைப் பரிசில் பெற்ற கல்வியாளர்) என்பதும் டெயிலிநியூஸ் பத்திரிகைக்குத் தெரியாமற் போனது அதன் துர்ப்பாக்கியமே. அந்தப் பிரமுகர் அமெரிக்க ஸ்தானிகருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் எழுதிய கடிதங்கள் மூலமாக இந்தப் புரட்டுக்களைத் துடைத்தெறிந்து விட்டார்,

சம்பவம் ஒரு சயிக்கிள் விபத்து என்பதையும், ஓவியருக்கு உதவ முன் வந்த கூட்டம் தன்னை நையப்புடைத்து விடுமெனப் பயந்ததாலேயே சயிக்கிள் ஓட்டி ஓடி மறைந்தான் என்பதையும், நிலத்தில் மோதுண்டு விழுந்ததால் ஓவியருக்கு தலையில் வெடிப்பு ஏற்பட்டது என்பதையும், கூட்டத்தினரே ஓவியரை ஒரு ராக்சியில் ஏற்றி அனுப்பினார்கள் என்பதும், ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்விட்ட ராக்சி சாரதி அதற்கு கட்டணம் எதுவும் வாங்க மறுத்தார் என்பதையும் தனது கடிதங்களில் அந்த அமெரிக்க கல்வியாளர் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஏரிக்கரைக்கு கேடுகெட்ட பழைய சரித்திரம் உண்டு. அது தொழிலாள வர்க்கத்தினருக்கும், முற்போக்கு இயக்கங்களுக்கும் பரம எதிரி என்பது மட்டுமல்ல வெட்கம் எதுவுமின்றி உண்மைகளைத் திருத்துக் கூறுவதில் பெயர் பெற்றுள்ளதுடன், மக்களை இன, மத, அடிப்படையில் பிரிப்பதற்கு தூண்டுதல்களையும் செய்து வந்துள்ளது வரலாறு. ஏரிக்கரை ஸ்தாபனம் அரசு உடமையானதும் ஒருவர் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டிருக்கலாம். ஆனால் புதிய ஆட்சியாளர்களின் பழைய நண்பர்களும் ஏரிக்கரையின் போஷகர்களும் தற்போது முன்னுக்கு வந்து தமது கேடுகெட்ட ஆபத்தான வேலையைத் தொடருகின்றனர். அரசாங்கத் தலைவர்களும், ஏரிக்கறையும் எந்த நேரமும் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையைப் போதித்துக் கொண்டு அதே சமயம் வகுப்பு வாதத்திற்கும் தூபம் போட்டுக் கொண்டிருக்கின்றனர். சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைகளைப் பற்றித் தலையங்கம் எழுதும் போதெல்லாம், டெயிலிநியூஸ் 1958- 1972ல் இடம் பெற்ற இரத்தக்களரிகளைச் சுட்டிக் காட்டித் தமிழர்களைப் பயமுறுத்தத் தவறியது கிடையாது. டெயிலிநியூஸ் தொடர்ந்தும் தனது கீழ்த்தரமான வேலைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்படாது. அரசாங்கம் அதன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. ★

## மந்திரியின் சீற்றம்

சமசமாஜக் கட்சியினரின் துணையுடன் ஏரிக்கரைப் பத்திரிகைகள் அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவதாக எம். எச். முகமது அவர்கள் ஆக்ரோசத்துடன் குற்றஞ் சாட்டினர். இதை ஏரிக்கரை பத்திரிகைகள் பெரும் பிரச்சாரப்படுத்தின.

ஏரிக்கரைப் பத்திரிகைகளை ''அரசாங்க வர்த்தமானி'' என மக்கள் சிரிப்புடன் கூறுகிறார்கள். பத்திரிகைகளின் சரித்திரத்தில் அதிகாரத்திலிருக்கும் அரசாங்கத்திற்கு துதிபாடும் வேலையை இன்று ஏரிக்கரையிலுள்ள ஒரு கும்பல் செய்வது போல என்றுமே செய்தது கிடையாது. சந்தேகத்திற்கு இடமான அதன் சாதனைகளைப் பெரிதாகப் போற்றியும் அதன் தோல்விகளை, தில்லுமுல்லுகளை, ஊழல்களை மூடிமறைப்பதுமே ஏரிக்கரையின் ''சாதனை'' யாகும்.

ஒருபோலிக் குத்துச்சண்டை நடைபெற்றுள்ளது சீரழிந்துள்ள பஸ் சேவை பற்றியோ, அல்லது மக்கள் அனுபவிக்கும் சித்திரவதை பற்றியோ, ஏரிக்கரை ஆயிரத்தில் ஒரு பகுதியைத் தன்னும் அம்பலப்படுத்தியது கிடையாது. அதை என்றுமே செய்யவும் மாட்டாது. ஏரிக்கரையின் மேலெழுந்தவாரியான குறிப்பும் மந்திரி அவர்களின் திடீர்ப் பாய்ச்சலும் தனியார் துறையினரையும் பஸ் போக்குவரத்து சேவைக்குள் புகுவதற்கு அரசாங்கம் அனுமதித்ததை மூடிமறைப்பதற்கேயாகும். மோசமான கஷ்டங்களை மக்கள் அனுபவித்தால் எதிர்ப்பு இன்றித் தனியார் வசம் ஒப்படைப்பதை அவர்கள் வரவேற்பார்கள் என்பதே அவர்களின் தர்க்கமாகும்.

பஸ் போக்குவரத்தைத் தனியார் துறையினரிடம் ஒப்படைப்பதற்காக மக்களை இவ்வளவு தூரம் வதைக்க வேண்டுமா?

★

## தமிழர் கூட்டணியின் பயங்கர விளையாட்டு

கம்பூச்சியாவில் வியட்நாமின் பொம்மை ஆட்சியாளரை அங்கீகரிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் விதத்தில் ஏற்படுத்தப்பட்ட கையெழுத்துப் பட்டியலுக்கு பத்திரிகை பிரச்சாரம் கொடுக்கப்பட்டது. ஆச்சரியம் என்னவென்றால் அமிர்தலிங்கத்தின் பெயர் முதலில் காணப்பட்டதுதான்.

முதற் பார்வையில் அவர் வித்தியாமானவர்கள் கூட்டத்தில் நிற்பது போலத் தோன்றும். பட்டியலில் காணப்படும் ஏனையவர்கள் அனைவரும் பொதுத் [illegible] ராட்சி மன்றத் [illegible]லில் [illegible] னைற்றில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ''இடதுசாரி''யினர் ஆனால் அமிர்தலிங்கமும் அவரது கட்சியுமே நாடாளுமன்றத்தில் சில ஆசனங்களையும், ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். இரண்டாவதாகப் பட்டியலில் உள்ளவர்கள் மொஸ்கோவுடன் நீண்டகாலத் தொடர்புகளைக் கொண்டிருப்பவர்களாகவும். மொஸ்கோவின் பணிப்புரைகளை அடிமைத்தனத்துடன் செயற்படுத்துவதில் கேடுகெட்டவர்கள் எனப் பெயர் பெற்றவர்களாவர். அத்துடன் தமது உயிர்வாழ்வுக்கு மொஸ்கோவையே தங்கியிருப்பவர்கள் என்பதும் தெரிந்ததே. அமிர்தலிங்கத்திற்கும் மொஸ்கோவிற்கும் அவ்வாறான தொடர்பு வெளிப்படையானதாக இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் அவரது கையொப்பம் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்தது எப்படி?

சர்வதேச விவகாரங்களில் அவருக்கு ஒன்றுமே தெரியாது. அவர் புள்ளடியிட்ட கோட்டில் ஒப்பமிட நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பது ஒரு மரியாதையான விளக்கம். ஆனால் அவர் தானே இரட்டை நாக்குக்கு பெயர் பெற்றவராச்சே. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இரண்டு வேறு விடயங்களை அவரது இரண்டு நாக்குகளும் சொல்லும் வல்லமை உடையது. அவர் வடக்கில் ஒன்றையும், சரஸ்வதி மண்டபத்தில் ஒன்றையும், இந்தியாவில் ஒன்றையும் இவற்றிற்கு வேறு ஒன்றை நாடாளுமன்றத்திலும் கூறுவார். அப்பாவித்தனமோ, அறிவீனமோ இதற்குக் காரணமல்ல.

பழைய ''இடதுசாரி''க் கட்சிகளுக்கு ஆதரவு கொடுக்குமாறு வெளி இடங்களில் வதியும் தமிழ் மக்களிடம் அவர் விடுத்தவேண்டுகோளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. மக்களால் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்ட இந்தக் கட்சிகளிடமிருந்து சிறுபான்மை மக்களின் கோரிக்கை வென்றெடுப்பதற்கு கிடைக்கும் ஆதரவில் பிரயோசன ஏதும் இல்லை. ஈழத்தை வெளியாரின் உதவியுடன் பெற்றுவிடலாமென்று தமிழ் மக்களை ஏமாற்றுவதே அவருடைய தந்திரமாகும்.

தணிக்கை

ஒரு புரட்சிப் பாதையை மேற்கொண்டால் அது தற்கொலைக்கு ஒப்பாகும் என்பதும் அது தனக்கும் தனது நண்பர்களுக்கும் தலைமைப் பதவியைப் பறித்தெடுத்து விடுவதோடு தமது சமூக பொருளாதார நிலைமையும் பறித்தெடுத்து விடுமென்பதால் அந்தப் பாதையை அவர் மேற்கொள்ள முன்வரமாட்டார். ஆனால் ''ஈழம்'' ''ஈழம்'' என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தால் மட்டுமே அவருக்கும் அவரது சகாக்களுக்கும் வாக்குகள் கிடைக்கும். தனது அரசியல் பிழைப்பை நடாத்துவதற்காகவே ஈழத்தை அந்நிய உதவியுடன் பெறலாமென அவர் சாடையாகச் சொல்லி வருகின்றார். சிறுபான்மையினருக்கு அல்லது விடுதலைப்போராட்டங்களுக்கு உதவி செய்கிறோமென்ற போர்வையில் ஏனைய தேசங்களின் எல்லைகளை மீறிப் படை நடப்புச் செய்கின்ற மொஸ்கோ, ஹனோய், ஹவனா ஆளும் கும்பல்களின் பொறியில் மக்கள் சுலபமாக விழுந்து விடக் கூடுமென்பது அவர்களின் ஒரு கணிப்பீடாகும், எனவே தான் வியட்னாமின் கம்பூசியா மீதான ஆக்கிரமிப்பைப் பிரச்சாரப்படுத்தி ஆதரவு கொடுப்பதும் நொம்பனில் உள்ள வியட்நாம் பொம்மை ஆட்சியாளர்களை அங்கீகரிக்கக் கோருதலும் நடைபெறுகிறது.

அமிர்தலிங்கம் ஒரு ஆபத்தான விளையாட்டில் ஈடுபட்டுள்ளார். உலக மேலாதிக்கத்திற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மொஸ்கோ ஏதோ சாட்டுக்களுடன் பிறநாட்டுப் பிரதேசங்களுக்குள் புகுவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது. இரட்சகர்கள் என்ற போர்வையில் அங்கோலா, எதியோப்பியா, தென் யேமன், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குள் சென்ற ரஷ்யர்கள் அங்கு தங்கி சுரண்டலிலும் ஆதிக்கம் செலுத்துவதிலும் ஈடுபட்டிருப்பதை அந்த மக்கள் சொல்லுவார்கள். தேசங்களைக் காட்டிக் கொடுப்பவர்களை மக்கள் மன்னிக்கமாட்டார்கள் என்பது அமிர் கூட்டத்தினருக்குத் தெரிந்திருக்க வேண்டும். பங்காள தேசத்தை உருவாக்க ரஷ்ய, இந்திய உதவியைப் பெற்ற முஜிபூர் ரகுமான் விரைவிலேயே ஒரு தகுந்த பாடத்தைக் கற்றுக் கொண்டதை அமிருக்கு நினைவூட்ட விரும்புகிறோம். ★

செம்பதாகை

சந்தா விபரம்

1 வருடம் ரூபா 7-50
6 மாதம் ரூபா 3-50

நிர்வாகி
15/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சொத்துடையோர்க்குத் தேவை இனங்களிடையே பிளவு; உழைப்போர்க்குத் தேவை இனஐக்கியம்

# தமிழ் இளைஞரும் தனிவழியும்

தமிழ் இளைஞர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு என்றும் இல்லாத அளவிற்கு வளர்ச்சி பெற்று வருகின்றது. தேசிய இனப் பிரச்சினையின் உள்ளார்ந்த தன்மைகளை சரியான முறையில் அணுகவும், அதைத்தீர்ப்பதற்கான பாதையில் தேசிய சர்வதேசிய ரீதியில் சரியான மார்க்கங்களை தேடிக் கொள்ளவும், தமிழ்த் தலைவர்களின் சுயநலப் பிற்போக்குத் தன்மைகளை அம்பலமாக்கவும், அவர்களது வர்க்க நிலையின் உண்மைத் தோற்றத்தைப் புரிந்து கொள்ளவும் தமிழ் இளைஞர்கள் தமது முன் முயற்சியை வேகமாக முன்னெடுத்து வருகின்றனர். நம் நாட்டில் தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் ஒன்றன் பின் ஒன்றாக அமுல்படுத்தப்பட்டு வந்த இன அடக்கு முறைகளையும் அதை எதிர்ப்பதற்கு தமிழ் தலைவர்கள் கடைப்பிடித்து வந்த தவறான கொள்கைகளையும் தமிழ் இளைஞர்கள் இன்று சீர்தூக்கிப் பார்க்கின்றனர். இதில் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முதலாளித்துவ சக்திகள் எத்தகைய பாத்திரத்தை வகித்தன என்பதை ஒரு வர்க்கக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து பார்க்கின்றனர். தமிழ் ஈழக்கோரிக்கை எவ் வகையில் முன் வைக்கப்பட்டது, உண்மையில் இது சாத்தியமா? இக் கோரிக்கையின் பின்னால் உள்ள வர்க்க நோக்கங்கள் என்ன என்பதை ஒரு விமர்சனக் கண்ணோட்டத்தில் தமிழ் இளைஞர்களில் கணிசமனோர் சிந்தித்துப் பார்க்கின்றனர். தமிழ் ஈழம் என்ற உணர்ச்சி ததும்பும் கோஷம் எவ்வாறு தமிழ்த் தலைவர்களின் நலன்களுக்குப் பயன்பட்டது என்பதையும். அதற்காக ஏராளம் இளைஞர்களின் சக்தி வீண் விரயமாக்கப்பட்டது என்பதையும் தமிழ் இளைஞர்கள் ஆழமாகச் சிந்திக்க முன் வந்துள்ளனர். இதனாலேயே தமிழ் இளைஞர்கள் தனி வழி செல்ல வேண்டும் என்ற கோரிக்கை இளைஞர்கள் மத்தியில் எழுந்தது. இத் தனி வழி என்ற கோரிக்கை தமிழர் கூட்டணியையும், தமிழ்த் தலைவர்களையும் பெரும தடுமாற்றத்திற்கு ஆளாக்கியது.

## கூட்டணித்தலைமை திட்டமிட்ட சூழ்ச்சி

தமிழ் இளைஞர்களின் இவ் அரசியல் விழிப்புணர்வால் பீதிக்குள்ளான தமிழ்த் தலைவர்கள் இத் தனி வழி இளைஞர்களுக்கு எதிராக பல்முனைத் தாக்குதலைத் தொடுத்தனர். ''சமதர்ம சோஷலிச தமிழ் ஈழம்'' அமைக்கப் போகின்றோம் என்று குரல் கொடுத்த தமிழ்த் தலைவர்கள் இளைஞர் அமைப்புக்குள் ''இடதுசாரிகள் ஊடுருவல்'' என்று ஓலமிட்டனர். இந்த ''இடதுசாரிகளை'' மட்டம்தட்டும் வேலைகளையும் மேற்கொண்டனர், தமது மட்டம் தட்டும் இவ் வேலையில் வெற்றி பெற்றதாகவே கூட்டணித் தலைவர்கள் நம்புகின்றனர். இளைஞர் அமைப்புக்குள் தமக்கு எதிராகக் கண்டனம், விமர்சனம், மாற்றுக் கொள்கை முன்வைக்கும் சகலரையும் அப்புறப்படுத்தி விட்டு தமக்கும் தமது வர்க்க நோக்கங்களுக்கும், தமது வெற்றுக் கோஷங்களுக்கும் ஆமாம் போடும் சில பேர் வழிகளை இளைஞர் அமைப்புக்கு பொறுப்பானவர்களாக மாற்றியுள்ளனர். இது தமிழ்த் தலைவர்களால் திட்டமிட்டு அகற்ற வேண்டியவர்களை அகற்றி உயர்த்த வேண்டியவர்களை உயர்த்தி உள்ள ஒரு செயலாகும்.

## இளைஞர்கள் சிந்திககவேண்டும்

இவ்வாறு தமிழ்த் தலைவர்கள் தமது சகல செல்வாக்கையும் பயன்படுத்தி தனிவழி இளைஞர்களை ஏன் மட்டம் தட்டினார்கள். அங்கேதான் அவர்களது சொத்துடைமையின், பதவி ஆசையின், குடும்ப ஆதிக்கத்தின் மொத்தமாகக் கூறின் வர்க்க ஆதிக்கத்தின் முழு உருவத்தையும் காணக் கூடியதாக உள்ளத. இவர்களது நடவடிக்கையை ஆதரிக்கும் அல்லது துதிபாடும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். காரணம் இளைஞர்களும் வர்க்க அடிப்படைக்கு உட்பட்டவர்களே என்பதாகும். தமிழ் இளைஞர்களோ அல்லது சிங்கள இளைஞர்களோ ஒரு தனி வர்க்கப் பிரிவினர் அல்லர். அவர்கள் பல்வேறு வர்க்கத் தட்டுக்களைச் சேர்ந்தவர்களேயாவர். ஆதலால் அவர்களின் வர்க்க நிலைமைகளுக்கேற்ப சிந்தனைகளும் செயற்பாடுகளும் அமையவே செய்யும். ஆனால் தமிழ் இளைஞர்களில் பெரும்பான்மையினர் சாதாரண உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே யாவர். அவர்களது நியாயமான கருத்துக்களோ, கொள்கைகளோ அல்லது அவர்களால் முன்வைக்கப்படும் விமர்சனங்களோ ஒரு போதும் தமிழர் கூட்டணியின் தலைமைப் பீடத்தின் முன் செல்லுபடியாகாது என்பதை அண்மைக் காலத்தின் நடவடிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன. அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர்களின் சந்திப்பின் போது ஒரு பத்திரிகையாளர் கோப்பாய் எம. பி. திரு. கதிரவேற்பிள்ளையிடம் ''உங்கள் இளைஞர் அமைப்பைச் சேர்ந்த சிலர் மாக்சிசத்தை ஆதரிக்கின்றார்களே, அது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன''? என்று கேட்ட போது ''நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை ஏனெனில் அது எங்களையே விட்டு வைக்காது'' என்று அழுத்தம் திருத்தமாக கூறினார். இது தமிழர் கூட்டணித் தலைமையின் வர்க்க அம்சத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றதல்லவா? இது போன்ற எண்ணற்ற சம்பவங்கள் தமிழ்த் தலைவர்களின் உயர் வர்க்க நிலைப்பாட்டை தமிழ் இளைஞர்களுக்கு உணர்த்தியுள்ளன.

## இளைஞர்களின் பாதை

இன அடக்கு முறைகளினாலும், இன ஒதுக்கல் நடவடிக்கைகளாலும் விரக்தியுற்று வேதனைக்கு உள்ளான தமிழ் இளைஞர்கள் தமிழ்த் தலைவர்களின் பிற்போக்குவாத, தவறான கொள்கைகளின் வெறுமையை நன்கு உணருகின்றனர். இன்று அவர்கள் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு மாக்சிசம்-லெனினிசம் கூறும் வழிவகைகளை ஏற்றுக் கொள்ளும் நிலைமைகளுக்கு ஏற்ற வழிகளில் சர்வதேச புரட்சிகர இயக்கங்களைப் பற்றியும், மாக்சிச-லெனினிசம் எவ்வாறு தேசிய இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டது என்பதைப் பற்றியும் ஆர்வத்துடன் படிக்கவும் ஆராயவும் முற்பட்டிருப்பது வரவேற்கக் கூடியதே. இவ்விடத்தில் ஒரு விடயத்தை நாம் அழுத்திக் கூறுவது அவசியமாகும். அதாவது மாக்சிசம்-லெனினிசம்- மாசேதுங் சிந்தனை தேசிய இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டது என்றால் அது ஒரு வர்க்க அடிப்படையைக் ஆதாரமாகக் கொண்டது என்பது கவனிக்கப்படல் வேண்டும். அது பட்ட வர்த்தனமாகப் பாட்டாளி வர்க்க அரசியல் அடிப்படையிலேயே தேசிய இனப் பிரச்சினைக்கு மாக்சிசம் தீர்வு கண்டது என்பதை மறுக்க முடியாது. எனவே நமது நாட்டிலும் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் மட்டுமே தீர்வுக்கு வரமுடியும் என்பதையே மாக்சிசம் லெனினிசத்தின் வளர்ச்சியான மாசேதுங் சிந்தனை எடுத்துக் கூறுகின்றது.

ஆதலால் அரசியல் விழிப்புணர்வு பெற்ற தமிழ் இளைஞர்கள் தமது எதிர்காலத்தை மட்டுமன்றி முழுத் தமிழ் இனத்தின் எதிர்காலத்தை மட்டுமல்லாது முழுத் தேசத்தின் எதிர்கால நிலைமைகளையும் கணக்கில் எடுத்து முன் செல்ல வேண்டும். அவ்வாறு முன் செல்கையில் சர்வதேச ரீதியாக இன்று உலக மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல் சக்தியாக வளர்ந்து வரும் சோவியத்- அமெரிக்க மேலாதிக்க வல்லரசுகளின் சுய ரூபங்களையும் கண்டு கொள்வது அவசியமாகும். அதிலும் விஷேசமாக சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் அதன் கையாட்களாக வேலை செய்து வரும் கியூப, வியட்னாம் சக்திகளினதும் விஸ்தரிப்பு நோக்கங்களையும் கணக்கில் கொண்டு சரியான தேசிய-சர்வதேசியக் கொள்கைகளை முன்னெடுத்து முன் செல்வது அவசியமாகும். தனி வழிப் பாதையை முன்னெடுக்க முன் வந்திருக்கும் தமிழ் இளைஞர்கள் இந் நாட்டின் இன அடக்குமுறையையும், இன ஒதுக்கல்களையும் எதிர்க்கின்ற சகல புரட்சிகர முற்போக்கு, ஜனநாயக, தேசபக்த சக்திகளையும் இனம் கண்டு அவர்களோடு ஐக்கியத்தை மேற்கொண்டு சரியான பாதையில் முன்னேற முன்வரல் வேண்டும் அதுவே எதிர்காலத்தில் தேசிய இனப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கு வழி சமைக்கும் பாதையாகும்.

— நமது நிருபர் —

# இந்திய ஆளும் வர்க்கத்தின் மத்தியில் பிளவு!

## புரட்சிகர சக்திகள் முன்செல்ல வேண்டும்

இந்தியாவின் ஆளும் கட்சியான ஜனதாக் கட்சியினுள் பெரும போட்டியும், பூசலும் எழுந்து அதன் மூலம் பிரதமர் பதவி வகித்த மொராஜி தேசாய் தனது பதவியையும் ராஜினமாச் செய்துள்ளார். ஜனநாயகப் பாரம்பரியத்திற்கே மாபெரும் எடுத்துக்காட்டு என்று புகழ் பாடப்பட்ட இந்திய ''ஜனநாயகம்'' எவ்வளவு கேலிக் கூத்தானது என்பதை இன்று இந்திய மக்கள் மட்டுமன்றி உலக மக்களும் நன்கு காண்கின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற இந்தியப் பொதுத் தேர்தலில் இந்திரா காந்தியைத் தோற்கடிப்பதற்கு இந்திய ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளின் கூட்டாகவே ஜனதாக்கட்சி உருவெடுத்தது. ஏற்கனவே இந்திராகாந்தியின் தலைமையிலான இந்திய ஆளும் வர்க்கப் பகுதியினர் சோவியத் சமூக ஏகாதிபத்திய சார்புடையோராக விளங்கினர். ஜனதாக் கூட்டில் இணைந்தவர்கள் பெரும்பாலும் அமெரிக்க ஏகாதிபத்திய சார்புடையோராக விளங்கினர். இந்த ஜனதாக் கட்சித் தலைவர்கள் மத்தியில் இருந்த ஒரே ஒரு ஐக்கியம் இந்திராகாந்தியை எப்படியும் தோற்கடிப்பது என்பதேயாகும். இதை விட இந்திய மக்களின் பிரச்சினைகளையோ அல்லது அவர்களது அபிலாஷைகளையோ நிறைவேற்றுவதல்ல. அதற்குக் காரணம் ஜனதாத தலைவர்களும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்த கட்சிகளும் இந்திய முதலாளித்துவதற்கும்- நிலப் பிரபுத்துவத்திற்கும் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டவையேயாகும்.

ஆனால் ஏற்கனவே பதவியிலிருந்த இந்திராகாந்தியைத் தோற்கடிப்பதற்கு ஜனதாத் தலைவர்கள் இந்திய மக்களின் நலனுக்காகக் கண்ணீர் வடிப்பது போல நடித்துக் கொண்டனர். இந்திராவின் ஆட்சியின் கீழ் இந்திய மக்கள் பட்ட அவஸ்தைகளுக்கும். கொடுமைகளுக்கும் ஒரு மாற்று வழி என நம்பி ஜனதாவை மக்கள் பதவிக்குக் கொண்டுவந்தனர் இந்திராவை தோற்கடிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு ஒன்று சேர்ந்த ஜனதாத் தலைவர்கள் மத்தியில் போட்டியும் பூசலும், பதவி ஆசையும் தலைவிரித்தாடி ஒருவரை ஒருவர் பகிரங்கமாகவே தாக்கி பிளவுண்ட நிலையில் உள்ளனர். இவர்களது பிளவு இந்திய மக்களின் பிரச்சினைகளைப் தீர்ப்பது சம்பந்தமான தகராறு அல்ல. அவர்களது ஆளும் வர்க்கத் தகராறு மட்டுமே.

இச் சந்தர்ப்பத்தை ஏற்கனவே பலம் இழந்த நிலையில் உள்ள இந்திராகாந்தி பயன்படுத்த முயற்சிக்கின்றார். இதற்குத் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தனது முழு பலத்தையும்இந்திராகாந்திக்கு கொடுத்து வருகின்றது. இந் நிலையில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வருவதோ அல்லது இந்திராகாந்தியோ அல்லது ஒரு கூட்டு அரசாங்கமோ பதவி ஏற்பதன் மூலம் மோசமடைந்துள்ள இந்திய மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. அதற்குப் பதிலாக இந்தியத் தொழிலாளி வர்க்கமும் கோடிக்கணக்கான இந்திய உழைக்கும் வெகு ஜனங்களும் புரட்சிகரப் பேரெழுச்சி ஒன்றுக்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்வதை தவிர வேறு வழியில்லை. இப் பேரெழுச்சியை பல்வேறு வழிகளில் பிளவு பட்டிருக்கும் இந்தியப் புரட்சிகர சக்திகள் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டுமென்பதே இந்தியமக்களின் அவாவாகும். இந்திய ஆளும் வர்க்கம் தம்முள் போட்டியிட்டு பலவீனமுறும் இவ் வேளை புரட்சிகர சக்திகள் சரியான கொள்கையையும்- தந்திரோபாயத்தையும் பாவித்து இந்திய வெகுஜனங்களுக்கு தலைமை தாங்க வேண்டும்.

**வர்க்க அடிப்படையிலான அரசியல் சிந்தனையே விடுதலைக்கு மார்க்கம்!**

# சண்முகதாசனின் தலைமை நிராகரிக்கப்பட்டது சரியானதே! ஒருவருடச் சம்பவங்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளன

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த நேர்மையான மாக்சிஸ்ட்-லெனினிஸ்டுக்கள் ஒன்று சேர்ந்து சண்முகதாசனின் ரொட்சிசவாத எதிர்ப் புரட்சிகரத் தலைமையை நிராகரிக்கும் முடிவிற்கான அறிக்கையை வெளியிட்டு சரியாக ஒரு வருடம் பூர்த்தியாகி உள்ளது. சண்முகதாசன் முன்வைத்த கொள்கையும், மாக்சிஸ்ட் லெனினிஸ்டுக்கள் முன்வைத்த கொள்கையும் கடந்த ஒரு வருடத்தில் நடைமுறையால் பரீட்சிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சண்முகதாசனின் நிலைப்பாடு ரொட்சிசவாத எதிர்ப் புரட்சிகரத் தன்மை கொண்டவை என்பதையும் மாக்சிஸ்ட் லெனினிஸ்டுக்கள் எடுத்த கொள்கை சரியானவை என்பதையும் தேசிய சர்வதேசிய நடைமுறைகள் நிரூபித்துள்ளன.

## ஐக்கிய முன்னணி

சண்முகதாசன் மாசேதுங் சிந்தனை பற்றி வெறும் வாயளவில் கூறி வந்தாரே தவிர அதன் சாராம்சத்தையோ, அதன் நடைமுறைப் பிரயோகத்தையோ புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் பலமான ஒரு கட்சியைக் கட்டி எழுப்புவதற்கு அவரால் முடியாது போயிற்று. இதற்குக் காரணம் புதிய ஜனநாயகப் புரட்சியைப் பற்றிப் பேசி அது தனது கொள்கை என்று கூறிய போதும் அவ்வாறான ஒரு புரட்சிக்கு தேவையான ஐக்கிய முன்னணி பற்றியோ அல்லது நடுநிலை சக்திகளை எவ்வாறு வென்றெடுப்பது பற்றியோ சரியான ஒரு கொள்கைக்கு வர முடியாது காலத்திற்குக் காலம் தவறான நிலைப்பாட்டை வகித்து அதற்கு காரணங்கள் கற்பித்து வந்ததாகும். இது உண்மையில் ரொட்சிய வாதிகளின் நிலைப்பாடே அன்றி வேறல்ல. யாருடன் ஐக்கியப்படுவது, யாரை வென்றெடுப்பது யாரை எதிர்ப்பது என்பதில் ஒரு மாக்சிச- லெனினிச- மாசேதுங் சிந்தனை நிலைப்பாட்டை மேற்கொள்வதற்குப் பதிலாக சண்முகதாசன் ஐக்கியப்படுத்தப்பட வேண்டிய அல்லது வென்றெடுக்கப்பட வேண்டிய சக்திகளுடன் பெரும்மோதல்களை உருவாக்கி அவர்களை எதிரியின் பக்கம் தள்ளி வந்த வேலையே செய்து வந்தார். ஆனால் தனது மேற்கண்ட ரொட்சிச நிலைப்பாட்டை மறைப்பதற்கு தொழிற் சங்க ரீதியில் திரிபுவாத், ரொட்சிசவாத, பிற்போக்கு, தொழிற் சங்கங்களுடன் ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு அதுதான் கட்சியின் ஐக்கிய முன்னணிக்கான வேலை என்ற பிரசாரம் செய்வார். அதே வேளை உண்மையாகவே ஐக்கியப்பட வேண்டிய சக்திகளை எதிர்த்து கண்டனங்கள் தெரிவித்து நிராகரித்து ஒதுக்கி விடுவது அவரது வழமையான வேலையாகும். உதாரணமாக கடந்த ஒருவருடத்திற்கு முன்பு புரட்சிகர சக்திகளின் ஐக்கியம் என்ற அடிப்படையில் பத்துக் குழுக்களுடன் இணைந்த ஒரு குறைந்தபட்ச ஐக்கிய நடவடிக்கைக்கு கட்சியில் தீர்மானம் எடுக்கப்பட்டு 1978ம் ஆண்டு மேதினம் உட்பட பல கூட்டங்கள் நடவடிக்கைகள் கட்சியால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கடந்த ஒரு வருடத்திற்குள் சண்முகதாசன் தானே முன் நின்று புரட்சிகர சக்திகளின் ஐக்கியமாக உருவாகி வந்த மேற்படி பத்துக் குழுக்களின் ஐக்கியததைச் சிதறடித்தார். தனது சீன எதிர்ப்பு, மூன்றுலகக் கோட்பாடு நிராகரிப்பு, மாசேதுங் சிந்தனை விரோத நடவடிக்கை ஆகியவற்றை அவ் ஐக்கியக் குழுக்களிடம் திணிக்க முற்பட்டு தோல்வி கண்டதும் அவ் ஐக்கிய குழுக்களையே நிராகரித்தார். அதற்குப் பதிலாக ரொட்சிச வாதிகளோடும் திரிபுவாதிகளோடும் கூடிக்குலாவி தனது பெயரையும் கட்சியின் பெயர்ப் பலகையையும் விளம்பரப்படுத்த இடம் தேடினார். இவ் ஆண்டு மேதினம் ரொட்சிச வாதிகளின் கூடிக்குலாவலோடு நடத்தப்பட்டது. சீன எதிர்ப்பையும், மாசேதுங் சிந்தனை விரோத நடவடிக்கைகளையும் சண்முகதாசன் முன்னெடுக்க ஆரம்பித்ததில் இருந்து தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் அவரது ரொட்சிச நிலைப்பாட்டை புரிந்து கொண்டு நிராகரித்து விட்டனர். சீனாவைப் பற்றியும், மாசேதுங் சிந்தனை பற்றியும் நன்கு புரிந்து கொண்ட இலங்கை மக்கள் சண்முகதாசனின் ரொட்சிச எதிர்ப் புரட்சிகரத் தன்மையை புரிந்து கொண்டு அவரை நிராகரித்துள்ளது ஆச்சரியம் அல்ல. இன்று விஜயவீராவும், அமிர்தலிங்கமும், என். எம். பெரேரா-பீட்டர் கெனமனும் சீனாவைப்பற்றி என்ன கூறுகிறார்களோ அதையே திருவாளர் சண்முகதாசனும் கூறி வருகிறார்.

## தேசிய இனப் பிரச்சினை

இதே போல் சண்முகதாசன் தேசிய இனப் பிரச்சினையில் தமிழ் இனம் ஒரு தேசிய இனம் இல்லை என்ற தனது தவறான நிலைப்பாட்டை இன்று அழுத்தி வருவதால் வட பகுதியில் தமிழ் மக்கள் முன்னிலைக்கு வந்து தடுமாற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டி ஏற்பட்டவன் போல் சண்முகதாசன் தமிழ் இனம் தேசிய இனம் இல்லை என்பதை எடுத்துக் காட்ட சிங்கள இனமும் ஒரு தேசிய இனம் இல்லை என்று வாதிட வேண்டிய பரிதாபகரமான நிலைக்குச் சென்றுள்ளார். அதே போல் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை மறுத்து வரும் ஒரே ஒரு "மாக்சிச வாதி" திரு. சண்முகதாசனே யாவார்.

ஆனால் சண்முகதாசனின் தலைமையையும் எதிர்ப் புரட்சிகர நிலைப்பாட்டையும் நிராகரித்த மாக்சிஸ்ட்- லெனினிஸ்டுகள் தம்மை இடது கம்யூனிஸ்ட் கட்சியாக அணிசேர்த்துக்கொண்டபோது தமிழ் இனம் ஒரு தேசிய இனம் என்பதையும், தமிழ் இனத்திற்குச் சுயநிர்ணய உரிமை உண்டென்பதையும் ஏற்றுக்கொண்டனர். இது இந் நாட்டில் உள்ள சிங்கள- தமிழ் புரட்சிகர சக்திகளின் மத்தியில் மேலும் வர்க்க ஐக்கியத்திற்கும் போராட்டத்திற்கும் பெரும் உந்து சக்தியாக அமைந்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

## சீன எதிர்ப்பு

சண்முகதாசனின் எதிர்ப் புரட்சிகரத் தோற்றம் முழுமையாக வெளிப்பாடடைவதற்கு அவரது சீன எதிர்ப்பும், தலைவர் மாஓவினால் முன் வைக்கப்பட்ட மூன்றுலகக் கோட்பாட்டை நிராகரிக்க முன் வந்ததும் நல்லதோர் உரைகல்லாக அமைந்தது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும், மூன்றுலகக் கோட்பாட்டையும் நிராகரிப்பதற்கு சண்முகதாசனால் முன் வைக்கப்பட்ட அர்ப்பத்தனமான தர்க்கங்கள் யாவும் இன்று சர்வதேச நிலைமைகளின் போக்கினால் முற்று முழுதாக முறியடிக்கப்பட்டுள்ளது. இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் உலக மேலாதிக்கத்திற்கான போட்டி, அதில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத்தன்மை, மூன்றாம் உலக நாடுகளினதும் மக்களினதும் பல்வேறு விதமான போராட்டங்கள், இவற்றை மேலும் வழி நடத்த ஒரு உலகம் பரந்த ஐக்கிய முன்னணி போன்ற விடயங்களே மூன்றுலகக் கோட்பாடு உள்ளாக்கி இருந்தது. மேலாதிக்க வல்லரசுகளால் கட்டவிழ்த்து விடக் கூடிய மூன்றாவது உலக யுத்தம் ஒன்றிக்கு எதிராக எவ்வாறு ஒரு பரந்த உலகம் தழுவிய ஐக்கிய முன்னணியைக் கட்டிஎழுப்புவது என்பதையே மூன்றுலகக் கோட்பாடு வலியுறுத்திக் கூறுகின்றது. இன்று மூன்றுலகக் கோட்பாட்டின் அடிப்படையில் மேலாதிக்க வல்லரசுகளுக்கு குறிப்பாக சோவியத் சமூக ஏகாதிபத்திய வாதிகளுக்கு உலகம் பரந்த எதிர்ப்பும், அடிகளும் வீழ்ந்து வருவதையும் அதே வேளை உலக மக்கள் மேலாதிக்க வாதத்திற்கு எதிரான உலகம் பரந்த ஐக்கிய முன்னணியின் அவசியத்தை உணர்ந்து வருவதையும் சண்முகதாசன் போன்ற வரட்டு வாதிகளால் காண முடியாதவைதான். இவர்கள் எவ்வளவுதான் கண்டனங்கள் செய்த போதும் மூன்றுலகக் கோட்பாடு உலகளாவிய தன்மையில் வெற்றி மேல் வெற்றி பெற்று வருகின்றன. இதைச் சர்வதேசிய சம்பவங்கள் நன்கு நிரூபித்து வருகின்றன.

— நமது அரசியல் நிருபர் —

## சரியும் பிழையும்

சண்முகதாசனை நிராகரித்த கடந்த ஒருவருட காலத்தில் தேசிய நிலைமைகளும், சர்வதேசிய நிலைமைகளும் மாக்சிஸ்ட் லெனினிஸ்டுக்கள் முன் வைத்த சரியான திசையில் முன்னேறி வருகின்றன. அதே வேளை சண்முகதாசனின் ஏமாற்றுக்கள் இன்று அம்பலமாகி அவரை ஆதரிப்போர் மத்தியில் மாசேதுங் சிந்தனையா?, அல்பேனியப் பாதையா?, அல்லது சுதந்திரமான பாதையா?, அல்லது அரசியலை விட்டு ஒதுங்குவோமா? என்ற பல்வேறு பிரச்சினைகளால் சின்னாபின்னப்பட்டு சீரழிந்த நிலையில் சண்முகதாசனும் அவரது "கட்சியும்" உள்ளன. தனது பெயரையும் கட்சியின் பெயர்ப்பலகையையும் பாதுகாக்க இறுதி வரை சண்முகதாசன் ஒரு கூட்டத்தை வைத்திருக்கவே முயலுவார். சண்முகதாசன் எதைச் சொன்னாலும் ஆமாம் சாமி போடும் கூட்டம் ஒன்று இருக்கவே செய்யும். அது ஒரு ரசிகர் கூட்டமே தவிர கொள்கையோ கோட்பாடோ பற்றி அக்கறைப்படாத கூட்டமே அது. எப்பொழுதும் சரியான கொள்கை முன்னேறிச் செல்லும். தவறான கொள்கை சீரழிந்து சின்னாபின்னப்படும். இது நியதி. இதை யாரும் மாற்ற முடியாது. சண்முகதாசனும் அவரைப்பின்பற்றுவோரும் ஏராளம் பிரச்சினைகளால் சிதறுண்டு முன்னேறமுடியாது திக்குமுக்காடும் இவ் வேளை அவரது தலைமையை நிராகரித்த மாக்சிஸ்ட்- லெனினிஸ்டுக்கள் கொள்கையிலும் நடைமுறையிலும் ஐக்கியப்பட்டு இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கடந்த ஒரு வருடத்தில் ஸ்தாபன ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஒன்றன் பின் ஒன்றான வெற்றிகளைப் பெற்று முன்னேறி வருகின்றனர். இது பெரும் சாதனை அல்ல. நீண்ட பெரும் பயணத்தின் சிறு அளவு முன்னேற்றமேயாகும். ஆனால் அதில் சரியான கொள்கை, சரியான நடைமுறை, சரியான ஸ்தாபனக் கோட்பாடு யாவும் தங்கி இருப்பதே வெற்றி என்று கூறப்படுவதாகும்.

## முன்னேறுவோம்!

எனவே சண்முகதாசனை நிராகரித்த அறிக்கையின் ஒரு வருடப் பூர்த்தியை ஞாபகப் படுத்தும் இவ் வேளை மாக்சிசம்- லெனினிசம் மாசேதுங் சிந்தனையின் வழிகாட்டலின் கீழ் இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கொள்கையிலும், நடைமுறையிலும், ஸ்தாபன ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மேலும் ஐக்கியப்பட்டு முன் செல்ல வேண்டும். அரசியலுக்கு முதலிடம் கொடுத்து ஸ்தாபனக் கட்டுப்பாட்டை உயர்த்திப் பிடித்து விமர்சனம் சுயவிமர்சனத்தால் தவறுகளை களைந்தெறிந்து கஷ்டத்திற்கும் மரணத்திற்கும் அஞ்சாத துணிவுடன் நமது நாட்டு மக்களின் விடுதலைப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கு கட்சி அங்கத்தவர்கள், வாலிபர் இயக்கத்தோழர்கள், ஏனைய வெகுஜன ஸ்தாபனங்களைச் சேர்ந்தோர் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

## சீனாவின் புதிய தேசியஇனம்

சீனாவின் ராஜ்ய சபை அண்மையில் ஜீனூஓ மக்களை ஒரு சிறுபான்மைத் தேசிய இனமாக அங்கீகரித்துள்ளது. இதன் மூலம் சீனாவின் சிறுபான்மைத் தேசியஇனங்களின் எண்ணிக்கை ஐம்பத்திநான்கில் இருந்து ஐம்பத்தைந்தாக உயர்ந்துள்ளது. ஜீனூஓ மக்களின் எண்ணிக்கை பத்தாயிரம் மட்டுமே. அவர்கள் தமக்கென ஒரு சொந்த மொழியைக் கொண்டுள்ளனர். ஆனால் அதற்கு எழுத்து வடிவம் இல்லை. ஹான்- திபேத்திய மொழிக்குடும்பத்தின் ஒரு கிளையான திபேத்திய- பர்மிய மொழியிலிருந்து பெறப்பட்ட ஒரு பேச்சு மொழியை இவர்கள் கொண்டுள்ளனர். இந்தப் பேச்சு மொழி பிரதேச வேறுபாடு இன்றி சகல மக்களாலும் ஒரே மாதிரியாகப் பேசப்படுகிறது.

ஜீனூஓ மக்கள் யூனான் மாகாணத்தில் சிசு ஆவ்பனா டாய் சுயாட்சிப் பகுதியில் உள்ள ஜீனூஓ லூகே மக்கள் கம்யூனில் ஒரு தொகுதியாக வாழ்ந்து வருகின்றனர்.

சீனாவின் மொழிவல்லுனர்களும், ஊழியர்களும் இப் பகுதிக்கு சென்று கடந்த இரு வருடங்களாக அம் மக்கள் மத்தியில் இருந்து பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். அதன் விளைவாக அந்த மக்களுக்கென ஒரு சொந்த மொழியும் பொருளாதாரத்தில் விஷேச தன்மையும், பொதுக் கலாச்சாரமும், பொதுப் பழக்க வழக்கங்களும் இருப்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இவை யாவும் அம் மக்களை ஓர் இனம் என்பதற்குத் தகுதியளிக்கின்றன என்ற முடிவிலேயே சீன அரசாங்கம் ஜீனூஓ இனத்தை சீனாவின் ஒரு தேசிய சிறுபான்மை இனமாக அங்கீகரித்துள்ளது. இது சோஷலிசத்தின் கீழ் சிறுபான்மைத் தேசிய இனங்கள் எவ்வாறு சுதந்திரத்துடனும், சுய கௌரவத்துடனும், சமத்துவத்துடனும் நடத்தப்படுகின்றன, பாதுகாக்கப்படுகின்றன என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அது மட்டுமன்றி இலங்கையில் தமிழ் இனம் ஒரு தேசிய இனம் இல்லை என்று இன்றும் வாதாடி வரும் வரட்டு மாக்சிச வேதாந்தியான சண்முகதாசனுக்கு இச் செய்தி கசப்பானதாகவே இருக்கும்.

**சொல்லில் புரட்சி செயலில் எதிர்ப்புரட்சி; போலி இடது உண்மையில் வலது இவை ரொட்சிசமே**

# உலக அரங்கில் — அங்கும் இங்கும்

உதயன்

## தென்கிழக்காசியாவிற்கு அச்சுறுத்தல்!
## "ஆயுதக்குறைப்பு" வெறும் ஏமாற்று!
## ஏன் இந்த அகதிகள் வெளியேற்றம்?
## எண்ணெய்க் கம்பனிகளின் சுரண்டல்!

கம்பூச்சியாவில் வியட்நாம் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட பொழுதும், லாவோஸ் நாட்டில் படைகளைக் குவித்த போதும், சீனாவின் எல்லைகளில் திட்டமிட்டு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்ட பொழுதும் உலகின் பல பகுதிகளில் அவை நம்ப முடியாத செய்திகளாகவே கருதப்பட்டன. ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பாரம்பரியத்தை உடைய ஒரு நாடு, தானே ஆதிக்கத்தை விரும்பும் போக்கை எவ்வாறு கடைபிடிக்க முடியும் என்பது பலருக்குப் புதிராக இருந்தது. கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம தனது படைகளை அகற்ற வேண்டும் என்று தொடக்கத்தில் சீனா குரல் எழுப்பியது. பெரிய தேசமாகிய சீனா சிறிய நாடாகிய 'ஜனநாயக' வியட்நாமை மிரட்டுகிறது- அச்சுறுத்துகிறது-என்று குரலெடுத்துக் கூவியது வியட்நாமிய பிரசாரம். ஆனால் எத்தனை நாளைக்குத்தான் உலகின் கண்ணில் வியட்நாம் மண் தூவ முடியும்?

மெல்ல மெல்ல உலகநாடுகள் பல வியட்நாமின் சுயரூபத்தை இனங்காணத் துவங்கி விட்டன. தென்கிழக்கு ஆசிய நாடுகள் நிறுவனமான ஆசியான் வெளிநாட்டு அமைச்சர்கள் அண்மையில் இந்தோனீஷிய நகரான பாலியில் கூடிய பொழுது, ஆசியாவில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் வியட்நாமின் செயல்கள் இருந்து வருகின்றன என்று திட்டவட்டமாக கூறியுள்ளனர். கம்பூச்சியாவிலும் லாவோசிலும் ஆக்கிரமிப்பை நடத்தியுள்ள வியட்நாம் தாய்லாந்து நாட்டை அச்சுறுத்தி வருவது பலரும் அறிந்ததே. ஏற்கனவே தாய்லாந்து எல்லைப் புறங்களில் வியட்நாமிய படைகளின் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது; பீரங்கித் தாக்குதல்களும் இடம் பெற்றுள்ளன. இந் நிலையிலே, தாய்லாந்து தாக்கப்பட்டால் ஏனைய நான்கு நாடுகளும் அதற்கு பூரண ஆதரவு வழங்குவதாக உறுதியளித்திருக்கின்றன. சென்ற வாரம் இந்த நாடுகள் வியட்நாம் மீது பொருளாதாரத் தடைகள் மேற் கொள்ளவும் ஆலோசித்துள்ளன. இது பற்றி சீன ''மக்கள் தினசரி'' கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

,,ஆசியான் நாடுகள் உண்மையை உணர்ந்து கொண்டன; ஆக்கிரமிப்புக்கு அடிபணிவதில் அர்த்தமில்லை. ஒற்றுமைப்பட்டு எதிரியை எதிர்ப்பதே பொருத்தமான செயலாகும். ஒற்றுமை பலத்தைக் கொடுக்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மக்கள் பாலி மாநாடு மூலம் முக்கியமான முடிவொன்றை மேற்கொண்டிருக்கின்றனர். வியட்நாமின் பிரதேச மேலாதிக்கத்தை எதிர்க்கக் கங்கணம் கட்டி விட்டனர்''

ஆசியான் நிறுவனத்தைப் போலவே, ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த நாடுகளும் வியட்நாமுக்கு வழங்கிவரும் நிதியுதவிகளையும், புனருத்தாரணத்துக்கான பொருளுதவிகளையும் நிறுத்தும் யோசனையை ஆராய்ந்துள்ளன. ஜெர்மனி ஏற்கனவே உதவியை நிறுத்தி விட்டது. அதைப்போலவே பிரிட்டிஷ் அரசாங்கமும் வியட்நாமுக்கு அளித்து வந்த சகல நிதியுதவிகளையும் ஏனைய சகாயங்களையும் உடனடியாக நிறுத்தியிருக்கிறது. துருக்கி வன்மையாகக் கண்டித்துள்ளது. உலகின் பல பாகங்களிலும் வியட்நாம் பற்றிய உண்மை நிலை உணரப்பட்டு வருவது தெளிவாகி விட்டது. எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்றி விட முடியுமா? உண்மை வெளிப்படத்தானே வேண்டும்? உலகளாவிய சோவியத் பிரசாரப் புயலினாலும் பொய்யை மெய்யாக்க முடியுமா?

★

இன்று பெரும்பாலான உலக நாடுகளின் எதிரிகளான மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும்- அதாவது சோவியத் யூனியனும் அமெரிக்காவும்- அண்மையில் பலத்த பிரசாரத்துக்கு மத்தியில் இரண்டாவது கேந்திர ஆயுதக்கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. கார்ட்டரும், பிரெஷ்னவும் கைகுலுக்கிக் காமிராக்களின் முன் நின்று சிரித்து உலக சமாதானம் பற்றி பலவாறு பேசியிருக்கின்றனர்,

மூன்றாவது மண்டல நாடுகளின் மக்கள் கருதுவது போல, மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும் தத்தம் செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதிகளைக் கூறுபோட்டு தம் வசமாக்கிக் கொள்வதற்கு உடன்படுவதையே இந்த புதிய ஒப்பந்தம் உறுதிப்படுத்துகிறது. இராணுவ பலத்தில் ஒரு விதமான சமநிலை இருக்கிறது என்பதை இரு வல்லரசுகளும் ஏற்றுக் கொண்டு செயல்படுவதையும் இது தெளிவாக்கிறது. ஆனால் வல்லரசுகளிடையே பலத்த போட்டா போட்டி நிலவுவதைத்தான் இது காட்டுகிறது. மத்திய கிழக்கு, மேற்கு ஐரோப்பா, இந்து சமுத்திரப் பிராந்தியம், தென் கிழக்கு ஆசியா, தென் அமெரிக்கா முதலிய பகுதிகளில் சோவியத யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் கடுமையான பலப்பரீட்சை கண்முன்னே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சிறிய ஆசிய நாடுகள் பல இந்த உண்மையை உணர்ந்து வருகின்றன. இவ்விஷயம் குறித்து நேபாள வாரப் பத்திரிகையான ''மாத்ரிபூமி'' அண்மையில் ஆசிரியர் தலையங்கம் ஒன்று எழுதியிருந்தது. அதிலிருந்து ஒரு பந்தியை இங்கு தருகிறோம்.

''இரு தலைவர்களும் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் அணு, ஜலவாயுக் குண்டுகள் பயன்படுத்தப்படும் யுத்தத்தின் ஆபத்தை உண்மையில் குறைக்கும் என்று கூற முடியாது. ஏனெனில், ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் இரு தரப்பும் புதிய அணு ஆயுதங்களை விருத்தி செய்யவும், கையிருப்பில் வைத்திருக்கவும் போதிய இடமளிக்கின்றன. ஆகையால் இரு மேலாதிக்க வல்லரசுகளும் தற்சமயம் அவற்றின் வசமுள்ள கேந்திர ஆயுதங்களை அழிக்க முன்வந்தாலன்றி மனுக்குலம் போரின் ஆபத்திலிருந்து விடுபடப் போவதில்லை. அது பூரண ஆயுதக் குறைப்பினாலேயே சாத்தியமாகும். வல்லரசுகளின் அக்கறைகள் அத்தகைய பூரண ஆயுத ஒழிப்பிற்கு ஒத்து வருமா? நேபாளப் பத்திரிகை கூறியது உண்மையே என்பதை உடனுக்குடன் நிரூபிப்பது போல அமெரிக்க, ரஷ்ய கூற்றுக்கள் அமைந்துள்ளன. இந்து சமுத்திரத்திலும் வளைகுடா பிராந்தியத்திலும் அமெரிக்க எண்ணெய் நலன்களுக்கு குந்தகம்ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றுமாயின், தாம் முழுமையான இராணுவ நடவடிக்கை எடுக்கப் பின் நிற்க மாட்டோம் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அப்பட்டமாக கூறினார்.

அதே வேளை அமெரிக்க கடற்படையின் நடமாட்டத்திற்குச் சவால் விடுவது போல சோவியத் யூனியன் தனது தூரகிழக்குத் துருப்புக்களின் கப்பல் போக்குவரத்து வசதிகளை பெரிதும் அதிகரித்துள்ளது. யப்பானுக்கு எச்சரிக்கையாக அமையும் வகையில், மிக நவீனமான துருப்பு ஏற்றும் கப்பலான ''இவான் ரொகொவ்'' என்பதையும், விமானந் தாங்கிக் கப்பலான ''மின்ஸ்க்'' என்பதையும் யப்பானியக் கடலில் நடமாடவிட்டிருக்கிறது. பதினைலாயிரம் தொன் எடையுள்ள ''இவான் ரொகொவ்'' எண்ணூறு போர் வீரர்களையும், பத்து தாங்கிகளையும், தரையிலும் நீரிலும் செல்லக் கூடிய வாகனங்கள் முப்பதையும் பல பீரங்கிகளையும் விரும்பிய இடத்தில் இறக்கக் கூடிய வல்லமை கொண்டது. இது போன்ற நவீன கலங்கள் பலவற்றை யப்பானியக் கடலில் ரஷ்யா இப்பொழுது வைத்திருப்பதாக யப்பானிய தற்பாதுகாப்புப் படை அதிகாரிகள் சிலர் அண்மையில் தெரிவித்துள்ளனர். ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவது ஒரு புறம்; பலப்பரீட்சைகள் மற்றொரு புறம். இதுதான் கேந்திர ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தின் தனிச்சிறப்பு! உதட்டில் ஒன்று; உள்ளத்தில் வேறொன்று.

★

ஆசிய நாடுகளுக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றுக்கே பெரும் தலையிடியாய் இன்று அமைந்து விட்டது வியட்நாமிய அகதிகள் பிரச்சினை. பல்லாயிரக்கணக்கான வியட்நாமிய மக்கள், அதிலும் குறிப்பாக சிறுபான்மை இனத்தவர்கள், தாம் வாழ்ந்த நாட்டை விட்டு ஓடித்தப்ப முற்பட்டுள்ளனர். தற்சமயம் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வியட்நாமிய அகதிகள் ஊண், உடை, உறைவிடம் முதலியன இன்றி, கடலிலும், பல ஆசிய நாடுகளின் எல்லைகளிலும் அவதிப்படுகின்றனர். இவர்களது உடைமைகள் வியட்நாமிய அரசாங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அகதிகளை வெளியேற்றுவது வியட்நாமுக்கு லாபகரமான முயற்சியாக அமைந்து விட்டது வியட்நாமிய விஷயங்களை நன்கு அறிந்த பத்திரிகை நிருபர்கள் இப்படி பல்லாயிரக்கணக்கிலும் வரலாறு முன்னர்காணாத விதத்திலும் அகதிகள் வெளியேறுவதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறுகின்றனர்.

சோவியத் ஆலோசனையின் பேரில் வியட்நாமிலே அமுலாக்கப்படும் விவசாய-கைத்தொழில் திட்டங்கள் தோல்வி கண்டமையால், பொதுவாக அந்த நாட்டில் உணவுப் பற்றுக்குறையும் பொருளாதாரக் குழப்பமும் பெருகிவருகின்றன. இதனால் வெளியேறுவோர் ஒரு பிரிவினர்! தனது மேலாதிக்கப் பேராசையை நிறைவேற்றுவதற்காக ''இந்தோ சீன சமஷ்டி'' என்ற பெயரில் அப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளை அடக்கி வைப்பதற்குப் பெரிய இராணுவம் தேவைப்படுகிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான இளம் விவசாயிகளும் பின் தங்கிய சமூகத்தவர்களும் கட்டாய இராணுவ சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதனாலும் பல்லாயிரக்கணக்கானோர் நாட்டிலிருந்து தப்பி ஓடுகின்றனர்; இவை யாவற்றுக்கும் மேலாக சிறுபான்மை இனத்தவர்கள் இரக்கமற்ற சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் ஆட்படுத்தப்பட்டு வருவதால் பல்லாயிரக்கணக்கானோர் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர். இலட்சக்கணக்கான இம் மக்கள் வியட்நாமிய பிரஜைகள். தேசிய விடுதலையும் சோஷசலிசமும் கிடைத்தால் தமது வாழ்வு மலரும் என்று நம்பி கடந்த காலங்களிலே பல்வேறு போராட்டங்களில் தியாகங்கள் புரிந்தவர்கள் ஆனால் வியட்நாமிய சோஷசலிசம் திசை தவறி சென்றதாலும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு வியட்நாம் கட்டுப்பட்டிருப்பதாலும் இன்று வியட்நாம் மக்களே அல்லற்பட்டு, அகதிகளாய் குடிபெயரும் அவல நிலை எழுந்துள்ளது. இது குறித்து அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அன்றூ பீகொக் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறார். ''பல்லாயிரக்கணக்கான தனது குடிமக்களின் உயிரைப் பற்றி எள்ளவேனும் அக்கறை இல்லாது அவர்களைப் படகுகளிலும் வள்ளங்களிலும் பரதேசிகளாய்ப் போகும்படி விடுகிறது வியட்நாம். உலக நாடுகளுக்கு இது பெரும் பொறுப்பாயிருக்கிறது. வியட்நாம் இதற்குப் பதில் கூறியேயாக வேண்டும். தனக்கு வேண்டாத பிரஜைகளை இவ்வாறு தட்டிக்கழிப்பதை உலக நாடுகள் சமூகம் இனியும் அனுமதிக்க இயலாது. ஐ. நா. இதுபற்றி நடவடிக்கை எடுப்பதை அவுஸ்திரேலியா ஆதரிக்கிறது.

★

எங்கும் எண்ணெய் விலை ஏற்றம் எற்பது பற்றியே பேச்சு. எரிபொருள் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் சர்வதேசப் பிரச்சினைகளாகி விட்டன.

ஆயினும் பிரச்சினை அவ்வளவு எளிதானதல்ல. குவைத் நாட்டு ''அல்செயிஸாஹ்'' என்னும் தினசரிக்கு சவூதிஅராபிய மன்னர் அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் கவனித்தற்குரிய கருத்தொன்றைக் கூறியிருந்தார். பெரும்பாலான எண்ணெய் ஏகாதிபத்திய நாடுகளின் கம்பெனிகளினாலேயே சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. எண்ணெய்க் கம்பெனிகள் இராட்சஸ நிறுவனங்கள். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளும், பயன்படுத்தும் நாடுகளும் இக் கம்பெனிகளினால் சுரண்டப்படுகின்றன. குறிப்பாக மிகப் பெரிய அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளே உலகரீதியாக எண்ணெய் விலையை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்தனவாயுள்ளன. இது விஷயத்தில் சோவியத் யூனியனும் விதிவிலக்கல்ல. சோவியத் சார்பான நாடுகளுக்கும் சரி, வேறு நாடுகளுக்கும் சரி ரஷ்யா அதிக லாபத்திலேயே எரிபொருள்களை விற்பனை செய்கிறது. உண்மையில் எண்ணெய் விலை அதிகரிப்புகளால் கைத்தொழில் நாடுகள், வளர்முக நாடுகளைத் தொடர்ந்தும் சுரண்டக் கூடிய நிலையே உறுதியடைகிறது. ★

## இரு மேலாதிக்க வல்லரசுகளின் ஆயுதப்போட்டியின் முடிவு உலகயுத்தமே

செம்பதாகை புரட்சிகர வெகுஜன ஏடு

JULY SEMPATHAKAI 1979

# இரண்டு ஆண்டுகளில் தார்மீக ஆட்சி

மக்களை கவர்ந்து இழுக்கும் பல தேர்தல் வாக்குறுதிகளோடும், ஆறில் ஐந்து பெரும்பான்மை என்ற பலத்த ஆரவாரத்தோடும் ஆட்சி பீடத்திற்கு வந்த யூ. என். பி. அரசாங்கம் தனது இரண்டு வருடப் பூர்த்தி விழாவை ஞாபகப்படுத்துகின்றது. இவ் வேளை உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பிரஜையும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் நடந்து கொண்ட முறைபற்றி நன்கு சிந்திப்பது அவசியம். தார்மீகத்தின் பெயரால் அரசாங்கம் பதவி ஏற்றதும் முதல் நடவடிக்கையாக நாட்டு மக்களின் அரைவாசிப் பேர்களின் கூப்பன் புத்தகங்களை பறித்துக் கொண்டது. விவசாயிகளுக்குக் கிடைத்து வந்த மானியங்களில் கை வைத்தது. அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்பட்டு திரு. ஜே. ஆர். தன்னைத்தானே ஜனாதிபதிஆக்கிக்கொண்டார். வர்த்தக வலயம் என்பது அறிமுகப்படுத்தப்பட்டு நமது நாட்டின் ஒரு பகுதியும், ஒரு தொகையான தொழிலாளர்களும் அந்நிய ஏகபோகக் கம்பனிகளுக்கு தாரைவார்க்கப்பட்டது. பல ஜனநாயக விரோதச் சட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றப்பட்டன. வேலை வங்கிப்படிவங்கள் வேலை இன்மையைப் போக்கி விடும் என்று பிரசாரப்படுத்தப்பட்டது. ஆனால் வேலை இன்மை இரண்டு ஆண்டுகளில் பல மடங்காக உயர்ந்துள்ளது. இனப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று கூறப்பட்ட போதிலும் இனவாத நடவடிக்கைகளைத் தூண்டும் வகையில் இன ஒதுக்கல் கொள்கைகள் கடைப் பிடிக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்தி படு நாசத்திற்கு உள்ளாகியது. பொருட்களின் விலைகள் என்றுமில்லாத அளவு உயர்ந்துள்ளன பெற்ரோல் விலை இரண்டு தடவைகள் உயர்த்தப்பட்டன. ஆடம்பரக் கார்கள் ஆயிரக்கணக்கில் இறக்குமதியாக்கப்பட்டன. சாதாரண மக்களின் போக்குவரத்து வசதிகள் சீரழிந்துள்ளன. ஜனாதிபதியும் மந்திரிமார்களும், எம். பீக்களும், உள்ளூராட்சி மன்றத்தலைவர்களும், உயர் அரசாங்க அதிகாரிகளும் உயர்ந்த சம்பளத்தைப் பெற்று சுகபோகம் அனுபவிக்கின்றனர். சாதாரண தொழிலாளிக்கோ அல்லது சாதாரண அரசாங்க- தனியார்துறை ஊழியர்கள் குறைந்த சம்பளத்தில் காலத்தைக் கழிக்கின்றனர். மொத்தத்தில் நமது நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு வேகமாக உயர்ந்து கொண்டிருக்கின்றது. அதே வேளை வாழ்க்கைத் தரம் மிக மோசமாக கீழ் இறங்கிக் கொண்டிருக்கின்றது. இந் நிலைமை கடந்த இரண்டு ஆண்டுகளில் மோசமடைந்துள்ளன. ஆனால் அரசாங்கத்தின் தலைவர்கள் தார்மீகம், ஜனநாயகம், என்றெல்லாம் அடிக்கடி உபதேசித்த வண்ணம் இருக்கின்றனர் சுருங்கக் கூறின் கடந்த இரண்டு ஆண்டுகளில் மக்களுக்கு அரசாங்கம் இழைத்த அநீதிகளும் துன்பங்களும் ஜனநாயகம், தார்மீகம் என்பவற்றால் போர்த்துமூடப்படுகின்றன என்பதே உண்மையாகும். எவ்வளவு தான் அரசாங்கம் தனது நடவடிக்கைகளைப் போர்த்துமூடினாலும் மக்கள் அதன் உண்மைகளை விரைவில் இனம் கண்டு கொள்ளவே செய்வார்கள். அப்பொழுது மக்களின் ஒன்றுபட்ட சக்திக்கு எவ்வளவு வல்லமையும், சாதுரியமும் கொண்டவர்கள் என்று புகழப்படுபவர்களாயினும் சரி பதில் கூறியே ஆக வேண்டும். நிச்சயம் மக்கள் முன் செல்வார்கள் என்பதே நமது நம்பிக்கையாகும்.

# சீன தேசிய மக்கள் காங்கிரசின்
## இரண்டாவது கூட்டத் தொடர் முடிவுற்றது

சீன மக்கள் குடியரசின் அரசாங்க அமைப்பான தேசிய மக்கள் காங்கிரசின் இரண்டாவது கூட்டத் தொடர் கடந்த யூன் மாதம் 18ம் திகதி தொடக்கம் யூலை முதலாம் திகதி வரை நடைபெற்றது. பீக்கிங்கில் உள்ள மக்கள் மகா மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத் தொடரில் நாட்டின் சகல பாகங்களின் இருந்தும் காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள், தேசபக்தர்கள் உட்பட சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கு கொண்டார்கள்.

கூட்டத் தொடரில் அரசாங்க வேலை பற்றிய விரிவான அறிக்கையை பிரதமர் குவா ஹோ பெங் அவர்கள் சமர்ப்பித்தார். இவ் அறிக்கை மீதான கலந்துரையாடலும், விவாதங்களும் பரந்த ஜனநாயக அடிப்படையில் நடைபெற்று அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் 1979ம் ஆண்டிற்கான பொருளாதார விரிவாக்கல் திட்டம், நிதி ஒதுக்கீடு, சட்டத்துறையிலான மாற்றங்கள் உட்பட பல்வேறு முக்கிய அம்சங்கள் பற்றிக் கூட்டத் தொடர் முடிவுகளை மேற்கொண்டது. அதே போல் தேசிய, சர்வதேசிய நிலைமைகள் பற்றிய சரியான கணிப்பீட்டையும் கூட்டத் தொடர் வரையறை செய்து கொண்டது.

மேற்படி காங்கிரசின் இரண்டாவது கூட்டத் தொடர் தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள், சிறுபான்மை இனங்கள், தேசபக்தர்கள் சகலரும் மாக்சிசம்-லெனினிசம்- மாசேதுங் சிந்தனைப் பதாகையின் கீழ் ஒன்றிணைந்து தோழர் குவா ஹோ பெங் அவர்களைத் தலைவராகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் மூலம் கடுமையான வேலைகளை முன்னெடுத்து சிறுசைவ சக்தி மிக்க நவீன சோஷலிச நாடாக்கும் முயற்சியில் முன்னேற வேண்டுமெனவும் அறை கூவல் விடுத்தது.

# ஐக்கியப்பட்ட போராட்டமே மார்க்கம்!
## தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அறிக்கை

வட பகுதியில் சாதிவெறி தீண்டாமை ஆகியவற்றின் கொடுமைகள் அநீதிகள், அட்டூழியங்கள் குறித்தும் அவற்றுக்கு எதிரான பல்வேறுபட்ட ஆதரவு நிலைமை குறித்தும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சார்ப்பில் அதன் உப தலைவர்கள் சி. நவரெத்தினம், த. தருமலிங்கம், இணைச்செயலாளர் இ. செல்வநாயகம் ஆகியோர் கடந்த மாதம் கூட்டாக வெளியிட்டிருந்த பத்திரிகை அறிக்கையைக் கீழே தருகின்றோம்.

வட பகுதியின் பல்வேறு பகுதிகளில் சாதிவெறியும், தீண்டாமையும் தலைவிரித்தாடி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகப் பல கொடுமைகளைப் புரிந்துள்ளன. இவற்றில் உச்ச நிலையை கைதடி, புன்னாலைக்கட்டுவன் சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இவ் வேளை ஒடுக்கப்பட்ட மக்கள் மிக விழிப்புடனும், ஐக்கியத்துடனும்செயல்பட்டு, தமது போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

சாதி அடக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராட்டங்கள் நடத்துவதன் மூலமே ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அடிப்படையான கொள்கையாகும். அதேவேளை சாதிவெறிக்கும் தீண்டாமைக்கும் எதிராக எங்கிருந்து ஆதரவான குரல்கள் வந்தாலும் அவற்றைப் புறக்கணிப்பதோ அல்லது கண்டனம் தெரிவிப்பதோ வெகுஜன இயக்கத்தின் குறிக்கோளுக்கு விரோதமானதாகும். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் கடந்த காலத்தில் பின்பற்றிய சரியான கொள்கையினால்தான் ஒடுக்கப்பட்ட மக்கள் உயர் சாதி நல்லெண்ணம் கொண்ட மக்களின் ஆதரவோடு தமது போராட்டங்களில் வெற்றி பெற்று உரிமைகளைப் பெற முடிந்தது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். எனவே மிகக்கஷ்டமான சூழ்நிலையிலும் பல சக்திகளை ஐக்கியப்படுத்தி சரியான தந்திரோபாயங்களைக்கையாண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை முன்னெடுத்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சார்பில் சிலர் தான் தோன்றித்தனமாக அறிக்கைகளை வெளியிட்டு வெகுஜன இயக்கத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் தனிமைப்படுத்த எடுக்கும் முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பரந்த அளவில் இயக்கங்களை முன்னெடுத்த வெகுஜன இயக்கத்தை குறிப்பிட்ட சிலர் தமது குறுகிய நோக்கங்களுக்குப் பயன்படுத்த முயற்சிப்பதற்கு எதிராக விழிப்பாக இருப்பதுடன், கடந்த காலத்தின் செழுமையான அனுபவங்களைக் கணக்கில் கொண்டு தொடர்ந்தும் ஒடுக்கப்பட்ட மக்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் கீழ் அணிதிரண்டு முன் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

## 1-ம் பக்கத் தொடர்சி வவுனியா இணைப்பு ..

ஒரு நிர்வாகப் பிரச்சினை என்றோ அல்லது நிர்வாகத்தை சுலபமாக்கி மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதென்றோ கூறி விடமுடியாது. ஏனெனில் இதை விட முக்கியமாக அமுல்படுத்தப்பட வேண்டிய நிர்வாகப் பிரச்சினை நாடு முழுவதும் இருக்கின்றன. ஆனால் இவ் இணைப்பில் காட்டப்பட்ட அவசியமும் அக்கறையும் ஏனையவற்றில் காட்டப்படவில்லை. இதிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியது என்னவெனில் இவ் இணைப்பில் இன ஒதுக்கலும், இன அடக்கு முறைத் தன்மையும் தங்கி இருக்கின்றது என்பதேயாகும். வவுனியாப் பிரதேசம் தமிழ் மக்களது பாரம்பரிய பிரதேசம் என்ற நிலையை எவ்வளவுவிரைவில் மாற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக மாற்றி அமைக்க முற்படும் முயற்சியாகவே உள்ளது. இதனால் இது வரை காலமும் அப் பிரதேசத்தின் பெரும்பான்மையான மக்களாக இருந்த தமிழ் மக்கள் எதிர்காலத்தில் சிறுபான்மையினராக்கப்படுவார்கள். இது திட்டமிட்ட திணிப்பு என்றே கூற வேண்டும்.

ஒரு புறத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைபற்றியும் அதன் தீர்வு பற்றியும், இன வாதத்தின் ஆபத்துபற்றியும் அதைக் கிளப்புபவர்களுக்கு எதிரான சட்டங்கள் பற்றியும் பேசி வரும் அரசாங்கம் மறுபுறத்தில் தான் உச்சரிப்பவைகளுக்கு எதிராகத் தானே நடந்து கொள்வதையே வவுனியா இணைப்பு பற்றிய முடிவு தெளிவாக்கின்றது.

எனவே அரசாங்கமும் அதன் தலைவர்களும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியோ அல்லது இனவாதத்தை முறியடிப்பது பற்றியோ உண்மையில் ஏதாவது நல்ல நோக்கத்தோடு செய்ய விரும்புவார்களாக இருந்தால் அதன் முன்னோடியாக வவுனியா இணைப்பு போன்ற நடவடிக்கைகளை வாபஸ்பெற்றே ஆக வேண்டும். இது இனங்களினதும் ஐக்கியத்தை விரும்பும் சக்திகளினதும், இனவாத நடவடிக்கைகளை எதிர்க்கும் நேர்மையான சக்திகளினதும் குரலாகும்.

# சண்முகதாசன் 'கட்சிக்குள்' சண்டை அதைத் தீர்க்க விஷேச மாநாடு

சண்முகதாசனின் கட்சிக்குள் பலத்த நாய் சண்டை ஏற்பட்டுள்ளதாம். அதைத் தீர்ப்பதற்கு (ஒரு பகுதியினரை வெளியேற்றுவதற்கு) இம் மாதம் 28ம், 29ம் திகதிகளில் கொழும்பில் விஷேச மாநாடு நடைபெற இருப்பதாகவும் தெரிய வருகின்றது. வழமையாகவே சண்முகதாசன் விஷேச மாநாடு நடத்தினால், அதன் அர்த்தம், தனக்குஎதிர்க்கருத்து உள்ளவர்களை எப்படியும் துரத்துவதற்காகத்தான் என்பது சகலரும் அறிந்ததே.

சண்முகதாசன் கடந்த ஒருவருடத்திற்கு முன் சீன எதிர்ப்பு, மூன்றுலகக் கோட்பாடு நிராகரிப்பு ஆகிய தீர்மானங்களை எடுத்த போது, தனது தர்க்கத்தை நியாயப்படுத்த அல்பேனியா மீதும், அன்வர் ஹோசா மீதும் அளவற்ற நம்பிக்கையுடன் கால் ஊன்றி நின்றார். அன்வர் ஹோசாவும், அல்பேனியாவும் ''ஆதர்ஷ சக்தி'' என்று வாதாடினார். அன்வர் ஹோசாவைச் சொல்ல முடியாத அளவுக்கு புகழ்ந்து கட்டுரைகள் எழுதினார். அல்பேனியா சென்றும் வந்தார். ஆனால் இப்பொழுது அன்வர் ஹோசாவையும் அல்பேனியாவையும் தாக்கி ஒரு அறிக்கை தயாரித்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. எதிலும் நிதானமான போக்கோ, ஆழ்ந்த ஆராய்வோ, இயங்கியல், பார்வையோ இல்லாத காரணத்தால்காலத்திற்குக் காலம் சண்முகதாசனின் நிலை இவ்வாறாகவேஇருந்து வந்துள்ளது.

தற்போதைய விஷேச மாநாட்டுடன் வெளியேறுபவர்களையும் விட்டால் சண்முகதாசனுடன் எஞ்சி இருக்கப் போகிறவர்கள் எத்தனை பேர் என்பதே அரசியல் வட்டாரங்களில் கேள்வியாக உள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட முன்வரல் வேண்டும். இதற்கு தமிழ் மக்களின் மீது திணிக்கப்படும் இன அடக்கு முறைகளைக் கைவிட வேண்டும் என்றும் அவர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படல் வேண்டும் என்றும அதே வேளை பிரிவினைக் கோரிக்கையை கைவிடச் செய்வதற்கான இயக்கத்தையும் முன்வைத்து இந் நாட்டின் சகல இன மக்கள் மத்தியிலும் பரந்த இயக்கத்தை முன்னெடுக்க தேசபக்த சக்திகள் முன்வரல் வேண்டும், அதுவே இனங்களுக்கிடையிலான பதட்டத்தைத் தணிக்கவும், உழைக்கும் வர்க்கத்தின் ஐக்கியத்தைப் பாதுகாக்கவும் அதே வேளை அந்நியத் தலையீடுகளை முறியடித்து தேசத்தின் சுதந்திரம், சுயாதிபத்தியம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும் தேசபக்த சக்திகளுக்கு முன்னால் உள்ள சரியானதும் உடனடியானதுமான தேவையாகும். இதுவே நாம் சகல தேசபக்த சக்திகளுக்கும் விடும் பணிவான வேண்டுகோளாகும்.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம், 93, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்டது: சி. நவரெத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.